International Journal of Research Instinct
(Peer-reviewed Journal)

ISSN ONLINE 2348-2095
Research Article

# அகநானூற்றில் ஊடல் தோன்றும் களன்கள

கி.சியாமளா,

பகுதி நேரமுனைவர் பட்ட ஆய்வாளர், விரிவுரையாளர், ஸ்ரீமத் ஆண்டவன் கலை மற்றும் அறிவியல் கல்லூரி (தன்னாட்சி), thதிருச்சி.05

## முன்னுரை

சங்க இலக்கியத்தில் ஊடலானது தலைவன் தலைவியின் காதல் நிகழ்வுகளைப் பிரதிபலிப்பதுடன், கருத்து முரண்பட்ட விடத்து எழுகின்ற எதிர்ப்பு நிலைதனையும் பதிவு செய்து கூடலில் முடிகின்ற இன்பவியலையும் காட்சிப்படுத்துகிறது. அகப்பொருள் கூற்றினுள் காதலை நகர்த்தி செல்வதில் இன்றியமையாத நிலைகளன் ஊடல். அது மருத நிலத்தின் நிலைத்த உரிப்பொருளாக அமைந்துள்ளது. அத்தகு, சிறப்புமிகு ஊடல் தோன்றும் களன்கள் அகநானுற்றில் எவ்வாறு பொருந்தியுள்ளது என்பதை ஆராய்ந்தறிவதே இவ்வாய்வின் நோக்கமாகும்.

## 1:1 தொல்காப்பியரின் விளக்கம்

செய்யுள் உறுப்புக்களில் இன்றியமையாத ஒன்றாகக் கருதப்படுவது களனாகும். ‘களன்’ என்பதற்குத் தொல்காப்பியர் செய்யுளியலில்,

**“ஒரு நெறிப் பட்டாங் கோரியன் முடியுங்**
**கரும நிகழ்ச்சி யிடமென மொழிப”**

என்கிறார் இவ்விடத்து களன் என்பதற்கு ஈண்டுதல் ‘இடம்’ என்பதாகும்.

தொல்காப்பிய சொல்லதிகாரத்தில்,

**“ஏழாகுதே**
**கண்ணெனப் பெயரிய வேற்றுமைக்கிளவி**
**வினைசெய் யிடத்தி னிலத்திற் காலத்தி**
**னனை வகைப் குறிப்பிற் றோன்று மதுவே”** 2

என்றும் நூற்பாவில் இடமென்பது வினை செய்யுமிடம், நிலம் என்றப் பொருளைக் குறித்து ஏழாம் வேற்றுமை கூறிய தொல்காப்பியர் இடம், காலம், வினை செய்யும் நிலம் என்றுரைப்பதைக் களனாகப் பார்க்கமுடிகிறது.

## 2:0 சூழலியல் களனாதால்

தொல்காப்பியர் அகத்திணையியலில் களவு, கற்பு ஆகியவற்றில் மாந்தர் நிகழ்த்தும் கூற்றுக்கள் களனாகக் கொள்ளப்படுகிறது.

**“கூற்றுக்களில் பெரும்பாலானவைகள் சூழலில் கண் நிகழ்வனவாக மொழியப்படுகின்றன. அக்கூற்றுக்கள் மொழியப்படும் போது பெரும்பாலும் சூழலைக் காட்டுகின்றன. அச்சூழல் களனாகும்”** 3

இக்கூற்று களனுக்கான வரையறையை எடுத்தியம்புகிறது. சூழலின்கண் நிகழ்வனவாக மொழியப்படுகின்ற மாந்தரின் கூற்றை.

**“கூற்றை நீக்கலி னாகிய நிலைமையும் நோக்கி**
**மடன்மா கூறும் இடனுமா ருண்டே”** 4

என்று தலைவன் உரைக்குமிடத்தும்,

**“மனைப்பட்டுக் கலங்கிச் சிதைந்தவழித் தோழிக்கு**
**நினைத்தல் சான்ற அருமறை யுயிர்த்தலும்”** 5

**“வெறியாட்டிடத்து வெருவின் கண்ணும்”** 6

என்று தலைவி கூற்றுக்களையும் களனாகப் பார்க்க முடிகிறது.

**3:0 களவில் ஊடலின் களன்**

கற்புக்காலத்தில் நிகழும் ஊடலுக்குத் தலைவன் பால் தலைவிக்கு உள்ள உரிமையுடனான காதலன்பு காரணமாகுமிடத்து அவை பிறருக்கு வெளிப்பட்டு நிற்பவையாக இடம்பெறுகிறது. ஊடலைத் தீர்க்கும் வாயில்களாக வெளிப்படுபவர்கள் அறத்தைக் கடைப்பிடிப்பவர்களாகவும் நிலை நாட்டுபவர்களாகவும் செயல்படுகின்றனர். அதனால் உரிமையும் கடமையும் கொண்ட தலைவிகள் தலைவனின் செயற்காட்டினுள் பிழை ஏற்படுமிடத்து அதிவிரைவாகத் தவறினைச் சுட்டிக் காட்டுகின்றனர். ஆனால் களவுக் காலத்து ஊடல் அவ்வாறு இல்லை. பிறர் அறியாவண்ணம் காதல் கொள்ளும் தலைவன் தலைவியிடத்து நிகழும் ஊடல் மிக அரிதாகவும் அழகானதாகவும் வெளிப்பட்டு நிற்கிறது.

**3:0:1 பரத்தையருடன் நீராடல்**

அகநானூற்றில் வரும் தலைவன், அழகுமிக்கப் பரத்தையர்களுடன் நீராடுவது கேட்டத் தலைவி ஊடல் கொள்கிறாள் என்பதை,

**“பிறர் மோட்டு நந்தின் பேழ்வாய் ஏற்றை**
**கதிர் மூக்கு ஆரல் களவன் ஆக,**
**நெடுநீர்ப் பொய்கைத் துணையொடு புணரும் மலிநீர்**
**அகல்வாய் யாணர் ஊர”** 7

என்கிறார். இவ்விடத்து நோக்குங்கால், தலைவன் தோழியின் உதவியினை நாடுகின்றான். தோழி அவ்விடத்து, நீ நீர்நிலையில் பரத்தையருடன் புனலாடியதை ஊரே அலர் தூற்றுகிறது என்கிறார். தலைவியுடனான காதல் வாழ்வு மட்டும் அலராகத் தூற்றப்படுவதில்லை. தலைவன்,

எக்காலத்தில் தடம் மாறிப்போனாலும் களவு, கற்பு என்றிரு வாழ்க்கையிலும் சரி சமுதாயத்தில் அலர் தூற்றப்படுவதைக் காணமுடிகிறது.

**3:0:2 குறியிடத்து நிகழல்**

நாட்டம் இரண்டும் அறிவுடம் படுத்தப்பட்டு காதலை மேற்கொண்டத் தலைமக்கள், தமது வேட்கையின் மிகுதியினால் இரவு, பகல் என்றிரு வேளைகளில் ஒருவரை ஒருவர் காண்பதற்கும் இன்பம் பெறுவதற்கும் முனைகின்றனர். அவ்விருவரும் சந்திக்கும் இடம் குறியிடம் ஆகும். பகலில் ஒரு இடத்தை தேர்வு செய்து சந்திப்பு நிகழ்த்துவது ‘பகற்குறி’ என்றும் தலைவியின் இல்லத்தின் அருகாமையினால் சந்தித்து கூடுதல் ‘இரவுக்குறி’ என்றும் வரையறுக்கப்பட்டுள்ளது.

**3:0:3 இரவுக்குறி**

அகநானூற்றுத் தலைவன் தலைவியரின் வாழ்க்கையில் புணர்ச்சிப் பொருட்களையும் ஆயுதங்களையும் சூழல் அமைவுகளையும் காதலின் விளையாட்டினையும் அகப்பாடல்களில் நன்கு காணமுடிகிறது.

**‘‘முற்றியத்தினை களவொழுக்கத்திற்கு முதல் இடையூறாகும். தலைவி புனங்காத்தல் இல்லெனவே பகற்காட்சியும் புணர்ச்சியும் இல்லையன்றோ, பின்னர் இரவுக்குறி வழி செல்க! என்று தலைவன் தோழியை நயந்து நிற்பான்’’ என்கிறார் வ.சுப. மாணிக்கனார்.** 8

**‘‘குவளை யுண்கண் கலுழ நின்மாட்டு**
**இவளும் பெரும்பே துற்றனர்’’** 9

என்பதிலிருந்து தலைவியின் ஊடல் மிகுந்த கூற்று வேட்கையையும் இரவுக்குறியில் தலைவியைக் காண வருதலையும் இவ்விடத்தில் காணமுடிகிறது. சங்க இலக்கியத்தில் பெரும்பான்மையான களவு வாழ்க்கையில் தலைவன் தலைவியின் இரவுப் புணர்ச்சியே அதிகம் கூறப்பட்டுள்ளது.

**3:1 குறியிடத்து ஊடல்**

தலைவனின் அறிவார்ந்த நிலையும் தலைவியின் அன்பும் வரைவுணர்ச்சியைக் காலம் நீட்டித்தவிடத்து சுட்டிக்காட்டி பகற்குறி, இரவுக்குறி இரண்டும் வேண்டா! என்று எண்ணித் துணித்தவிடத்தும் வரைவுக்கு வழி கோலுமிடத்தும் ஊடல் நிகழ்கிறது.

**‘‘களவொழுக்கம் தூயது கள்ளவொழுக்கம் தீயது,**
**களவுக் காதலர் மனமாசற்றவர்: மணந்து**
**கொள்ளும் உள்ளத்தினர்’’** 10

என்னுமிடத்து வரைவுக் கோடுதலை முன் வைக்குமிடத்து தலைவன் தலைவியிடத்து ஊடல் தோன்றுகிறது. மேலும்,

**‘‘மன்றல் வேண்டினும் பெறுகுவை ஒன்றோ இன்றுதலை யாக வாரல்’’**

என்பதினில் தலைவன் வரும் வழிதனில் யானையும் புலியும் பாம்பும் நடனமாடுகின்றது. தடம் குறுகலும் வழுக்கலும் உடையது. இடி, மின்னலுடன் மழையானது கொட்டுகிறது. மரப்பொந்தும் செடியும் பிணக்கத்தை உண்டுப் பண்ணுகின்றன. எனவே, இரவிலும் வராது. பகலிலும் வராது! வரைவுதனை மேற்கோள்! என்பதை அகநானூற்றின் வழி காணமுடிகிறது.

**3:2 ஊடலை மறைத்தல்:-**

ஊடல் கொண்டத் தலைவி, அவ்வூடலை மறுத்து நிற்கும் செய்கையினையும் அகநானூற்றுப் பாடலில் காணமுடிகிறது.

**‘‘மருதத்திணையின் உரிப்பொருளாவது ஊடல் இவ்வூடல் தலைவனது புறவொழுக்கம் காரணமாக வருவது என்று பலர் கொள்ளுவர். கூடலுக்கு இன்றியமையாத முன்னொழுக்கம் ஊடல். அது தலைவனது பரத்தையொழுக்கச் செயலால் பிறப்பது எனின், அங்ஙனம் தோன்றும் ஊடலொடு கூடலும் நல்லின்பம் பயவா. அதனால்தான் ஐந்திணையுள் ஒன்றான மருதத்திணையை நாகரிகமற்ற திணையாகச் சான்றோர் கருதுகின்றனர்’’**

12

என்று வ.சுப மாணிக்கனாரின் கூற்று மருதத்திணையின் நிலைப்பாட்டினைக் காட்டுவதாகும். ஊடலில் அளவிட்டுக் கூற முடியாத அளவிற்கு இன்பம் இருப்பினும், ஒரு சாரர் தலைவியை விடுத்து பரத்தையரை நாடுதல் ஒழுக்கத்திற்கு கேடானது என்று எண்ணுவதையும் அறியமுடிகிறது.

அகநானூற்றில் காம இன்பம் நுகரக் கருதிய தலைமகன் தன்னால் வரைந்து கொள்ளப்பட்ட காதற்பரத்தையை விடுத்து. அவன் சேரிப் பரத்தையருடன் நட்பு பாராட்டுகின்றான். இதனை அறிந்த காதற்பரத்தை தன் இல்லம் வந்து நின்ற தலைவனுடன் ஊடிச் சொல்லுவதாகப் பரணர்,

**‘‘ஒன்பொறிப் புனைகழல் சேவடிப் புரள**
**கருங்கச்சு யாத்த காண்பின் அவ்வயிற்று**
**இரும்பொலம் பாண்டில் மணியொடு தெளிர்ப்ப**
**புனல் நயந்து ஆடும் அத்தி அணி நயத்து காவிரி**
**கொண்டு ஒளித் தாங்கும் அன்னோ! நும்வயின் புலத்தல்**
**செல்லேம், எம்வயின் பசுந்தன்று! காண்டிசின் நுதலே’’**

13

இவ்வாறு ஊடலின் களனை வரலாற்றுச் செய்தியின் வழி காணமுடிகிறது. இதனைப் போன்று,

**‘‘யாம்தற் பகையேம் சேர்ந்தோர்**
**திருநுதல் பசப்ப நீங்கும்**
**கொழுநனும் சாலும் உடனுறை பகையே’’** 14

என்ற அகநானூற்றுப் பாடலின் வழி தலைவனின் பரத்தமை செயலை மறைத்ததின் வாயிலாகத் தலைவி ஊடல் கொண்டு இடித்துரைத்துக் கண்டிப்பதைப் பார்க்க முடிகிறது.

**4:0 கற்பில் ஊடல்:-**

தமிழ்ச் சமுதாயத்தில் வரைவு முறைகள் கற்பாகக் கொள்ளப்படுகிறது. சமூகத்தின் குறிக்கோளும் செயல் வழித்திறனும் அறம் சார்ந்தவையாய் புலப்பட்டு நிற்குமிடத்து, அவை தலைவன் தலைவியின் இல்லற வாழ்வாய் மலர்கின்றன. இதனை,

**‘‘கற்பெனப் படுவது கரணமொடு புணரக்**

**கொளல் மரபிற் கிழவன் கிழத்தியைக்**

**கொடைக்குறி மரபினோர் கொடுப்பக் கொள்வதுவே’’** 15

என்கிறார் தொல்காப்பியர்.

கற்பு வழிப்பட்ட திருமணம் அன்றி, களவு வழி கற்பாதலைத் தொல்காப்பியர்,

**‘‘கொடுப்போர் இன்றியும் கரணம் உண்டே**

**புணர்ந்துடன் போகிய காலையான’’** 16

என்றுரைப்பதின் வழி காணமுடிகிறது.

**4:0:1 பரத்தையருடன் நீராடல்:-**

தலைவனது பரத்தமை எத்தகையப் பெண்டிரின் உள்ளத்தையும் வருத்துமாறும் செய்திடும். அத்தைகையப் பண்புநலன் கொண்டது பரத்தமை வேட்கை தலைவன் மற்றொருப் பெண்ணை நாடுமிடத்து தலைவியின் உள்ளமானது வெதும்புகிறது.

அகநானுற்றில் தலைவியை விடுத்து தலைவன் பரத்தையுருடன் சென்று நெடுநேரம் நீராடியதினால் ஊரினில் எழுந்த அலரினிடத்தும் தலைவனின் கண்கள் மிக்கச் சிவந்திருப்பதினாலும் ஊடற்குறிப்புத் தோன்றுகிறது.

**‘‘நித்தம் ….. அரிமதர் மழைக்கண்** **17**

**சிவப்ப …… ஆருகம் வம்போ’’**

என்ற பாடல் வரியின் மூலம் புனல்நீராடல் ஊடற்குரிய களன்களாகப் பெரிதும் அமைகின்றன்றது.

**4:0:2 பரத்தையரின் ஒழுக்கம் சாடல்:-**

தலைமக்களின் வாழ்வியலில் வனப்பையும் வலுவையும் ஊட்டக் கூடியதாகப் பரத்தையர் பிரிவு உள்ளது. வ.சுப மாணிக்கனார் விளக்கியுரைப்பதில் பரத்தமையை நாடிச்செல்லும் தலைவனின் பண்பு சுட்டிக் காட்டப்படுகிறது. அகநானூற்றில்,

**சேற்றுநிலை முனைஇய செங்கட் காரன் ஊர்மடி**

**கங்குலின் நோன்தளை பறிந்து கூர்முள் வேலி**

**கோட்டின் நீக்கி நீர்முதிர் பழனத்து**

**மீனுடன் இரிய அத்தாம்பு வள்ளை**

**மயங்கித் தாமரை வண்டூது பனிமலர் ஆகும் ஊர**

**யாரை நிற் புலக்கேம்’’**

18

என்று எருமையின் மேல் ஏற்றி தலைவனது இன்ப இழிவுகளைச் சுட்டுவதுடன், இவ்விழிவுகளை நேராகச் சொல்லுதல் நாகரிகமற்றது என்பதினால், உள்ளுறையாகக் கூறி பரத்தமை ஒழுக்கத்தை இடித்துரைப்பதைக் காணமுடிகிறது.

**4:0:3 அலர்:**

கற்புக்காலத்தில் அலர் என்பது நெடுநாள் பிரிவு 'செவியறிவுறூஉ' எனப்படுகிறது. தலைவன் தலைவியைப் பிரிந்து பரத்தையுடன் நீராடல், குறுமகளை மணஞ்செய்தல் போன்ற குறிப்புகள் எழும்போது அங்கு ஊரால் அலர் தூற்றப்படுகிறது. அகநானூற்றில் தலைவன் தன்னால் விரும்பிப்பெற்ற பரத்தையுடன் சோலை சூழ்ந்த ஆற்றின் கண்ணே புனலாடினான் என்ற செய்தியைக் கேட்டுத் தலைவி ஊடியிருந்தாள். தலைவன் வாயில் வேண்ட தோழி பரத்தையுடன் தலைவன் நீராடியதனால் உண்டான அலர் குறித்து எடுத்துக் கூறி வாயில் மறுப்பதாக அமைந்துள்ளது. இதனை,

**"நெடுநீர்ப் பொய்கைத் துணையொடு புணரும்**

**மலிநீர் அகல்வாய் யாணர் ஊர!**

**……………………………………………….. ஆடினை என்ப**

**நெருநை அலரே**

**……………………………………………….. பதினோரு**

**வேளிரொடு வேந்தர் சாய மொய்வலி அறுத்த**

**ஞான்றை தொயியா அழுந்தூர் ஆர்ப்பினும்**

**பெரிதே"** 19

என்ற பாடலில் கரிகால் வளவன் வெண்ணிப்போரில் பதினோரு வேளிருடன் இருபெரும் வேந்தரும் போரிலே நிலைகுலைய செய்து வென்ற ஆரவாரத்தினும் தலைவன் பரத்தையுடன் புனலாடிய போது அன்றெழுந்த அலர் அதனைவிட மிகவும் பெரியதாகும் என்று இப்பாடல் உணர்த்துகிறது. மேலும்

தலைவியைப் பிரிந்து சென்ற தலைவன் பரத்தையர் சேரியில் குறுமகளை விரும்பி மணஞ்செய்து கொண்டான் இதனைக் கேள்வியுற்ற தலைவி ஊடல் கொள்கிறாள். தலைவன் மீண்டு வந்து வாயில் வேண்ட அலரை எடுத்துக் கூறி தோழி வாயில் மறுப்பதாக அமைந்துள்ளது.

**" ஒண்தொடி ஆயத்துள்ளும் நீ நயந்து**

**கொண்டான் என்ப 'ஓர் குறுமகள்"**

**………………………………………**

**அம்கலுழ் மாமை, அஃதை தந்தை,**

**……………………………………. வெண்ணெய்**

**வைப்பின் பருவூர்ப் பறந்தலை இருபெரு**

**வேந்தரும் பொழுது களத்து ஒழிய,**

**…………………………………………… களிறு**

**கவர் கம்பலை போல, அலர்**

**ஆகின்றது, பலர் வாய்ப் பட்டே"**

என்ற பாடல் தலைவன் பரத்தையர் குழாத்துள் ஒரு குறுமகளை மணந்து கொண்ட செய்தி, அஃதை தந்தை சோழன் இருபெரு வேந்தரை வென்ற போர்க்களத்து. அவரது களிறுகளைக் கவர்ந்த போது எழுந்த ஆரவாரம் போல விளங்கிற்று என்று கூறப்படுகிறது.

**5.0 முடிவுரை:**

அகநானுற்றில் தலைவன் வாயில் வேண்டுவதாக 3 பாடலும், வாயில் மறுப்பதாக 15 பாடலும், ஊடல் தீர்ந்தாளாய் தலைவி 2 பாடலும் தலைவன் தன் நெஞ்சிற்கு உரைத்ததாக 2 பாடலும் காண்ப்படுகிறது. அகநானூற்றில் ஊடல் தோன்றும் களன்களாகக் களவு பாடல்களிலும் கற்புப் பாடல்களிலும் எவ்வாறு அமைந்துள்ளது என்பதையும் களன் தலைவன் தலைவியருக்கு எவ்வாறு பொருந்தியுள்ளது என்பதையும் காணமுடிகிறது. இத்தகைய தலைவன் தலைவியரின் அதீத அன்பின் வெளிப்பாடுதான் ஊடல் தோன்றும் களனாக அமைந்துள்ளது.

**சான்றென் விளக்கம்**


1. தொல்காப்பியம், பொருளதிகாரம், நச்சினார்க்கினியர் உரை ப.41
2. தொல், சொல், சேனா. உரை., நூ. 565
3. டாக்டர் பாலகிருஷ்ணன், தொல்காப்பியப் பொருளதிகார வழி நற்றினை ஓர் ஆய்வு .179
4. தொல். பொருள்., 108
5. மேற்படி., 111
6. மேற்படி., 23
7. அகம்., 246
8. வ.சுப மாணிக்கனார், தமிழ்காதல், ப.45
9. அகம்., 310
10. வ.சுப மாணிக்கனார், தமிழ்காதல் ப.48
11. அகம்., 316
12. வ.சுப மாணிக்கனார், தமிழ்காதல் ப.292
13. அகம்., 376
14. அகம்., 186
15. தொல். பொருள்., 1067
16. மேற்படி., 1088
17. அகம்., 312
18. அகம்., 46
19. அகம்., 246
20. அகம்., 96